**மூன்றாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோயம்புத்தூர்**

2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் வெள்ளிக்கிழமை 24-ம் நாள் இந்த சாட்சியின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி) **திருமதி.M.அனுசுருதி பி.ஏ.,பி.எல்.,(Hons)** மூன்றாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| தேதி | - | 24.01.2025 |
| அசல் வழக்கு எண் | - | 1058/2016 |
| பெயர் | - | **நந்தகுமார் - வா.சா.-2** |
| தகப்பனார் பெயர் | - | சுப்புசாமி |
| வயது | - | 59 |
| பாலினம் | - | ஆண் |
| முகவரி | - | |
| தொழில் | - | செயல் அலுவலர், பெரிய நாயக்கன் பாளையம், டவுன் பஞ்சாயத்து. |

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 2-ம் வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி**:-

1) நான் பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல்அலுவலராக பணியாற்றி வருகிறேன். நான் என்னுடைய அடையாள அட்டையை நீதிமன்ற சான்றாவணம் 1 ஆக தாக்கல் செய்கிறேன். வாதி தரப்பு சான்றாவணம் வா.சா. ஆ. 5 சாட்சியுடன் காண்பிக்கப்பட்டது. அது தமிழ்ச்செல்வி பெயரில் வழங்கப்பட்ட உரிமமாகும். வா.சா.ஆ. 5 -ல் வழங்கப்பட்ட அனுமதிக்கு வா.சா.ஆ. 6 அங்கீகரிக்கப்பட்டு வரைபடம் வழங்கப்பட்டுள்ளது. என்னுடைய கோப்பில்

அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் மற்றும் கட்டிட அனுமதி உத்தரவு உள்ளது. வா.சா.ஆ. 6-ல் உள்ள அளவுகள் கிழமேல் வடபுறம் 76 அடி மற்றும் தென்வடல் மேல்புறம் 31 1/4 அடி ஆகும். இந்த அளவுள்ள மனையிடத்திற்கு கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ. 6 -ல் செயல் அலுவலரின் கையொப்பம் உள்ளது. அன்றைய தேதியில் S. சௌந்தரம் என்பவர் செயல் அலுவலராக பணியாற்றி வந்தார். வா.சா.ஆ. 6 வரைபடத்தில் Area of site 2157 சதுரடி ஆகும். கட்டிட அனுமதி வழங்கப்பட்ட அளவு தரைதளம் 712 மற்றும் போர்ட்டிகோ 118 என மொத்தம் 830 சதுர அடியாகும். கட்டிட அனுமதிக்கு முன்பு அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களையும் வரைபடத்தையும் சரிபார்த்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது. அளவுகளில் மாற்றம் இருந்தால் அனுமதி வழங்கப்படமாட்டாது. இரத்து செய்யப்படும்.

2) 2011 -ல் கூடுதல் கட்டுமானத்திற்காக அனுமதி வழங்கப்பட்டது. அதன் அளவுகள் தரைதளம் 228 சதுர அடி மற்றும் முதல் தளம் ACC 201 சதுர அடியாகும். அதே அளவுகள் கிழமேல் வடபுறம் 76 அடி, தென்புறம் 80 அடியாகும். மேல்புறம் தென்வடல் 31 1/4 அடியாகும். கிழபுறம் தென்வடல் 26 அடியாகும். இதனை அன்றைய செயல் அலுவலரான சௌந்தரம் என்பவர் வழங்கினார். கட்டிடத்திற்கு பேரூராட்சியில் வரிவிதிக்கப்பட்டுள்ளது. அதன் முகவரி சிறுகாளியம்மன் கோவில் வீதியாகும். அதன் சர்வே எண். 219 ஆகும். நான் தற்போது இடத்தைப் பார்வையிட்டேன். மனை அளவுகளுக்குள் வாதிகள் குடியிருக்கிறார்களா என்று நான் பார்க்கவில்லை. மனைக்குள் குடியிருக்கிறார்கள் ஆனால் அளவுகள் நான் பார்க்கவில்லை. அந்த மனையின் கதவு எண். 18/2 137 A 9, 18/3 137 A 7 ஆகும்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) கட்டிட அனுமதி கோரிய விண்ணப்பத்தினோடு என்னென்ன ஆவணங்கள் இணைத்து தந்தனர் என்றால் பாகபாத்திய விடுதலைப்பத்திரம் ஆவண எண்.

Initial
III ADM, Cbe.

14112/2006 , கட்டிடத்தின் மதிப்பீடு வில்லங்கச்சான்றிதழ் 5601 ஆகியவை ஆகும். 2011 ல் கூடுதல் கட்டிடத்திற்காக அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தினோடு என்னென்ன ஆவணங்கள் இணைத்து வழங்கப்பட்டது என்றால் பாகபாத்திய விடுதலைப்பத்திரம் ஆவண எண். 14112/2006 , பழைய வரைபட அனுமதி ஆவணமும் ஆகும். 2-வது அனுமதி விண்ணப்பத்தோடு வில்லங்கச்சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பாகபாத்திய விடுதலைப்பத்திரம் ஆவண எண். 14112/2006 -ன் படி தான் அனுமதி வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வரைபடத்தில் 219 சர்வே எண் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வரைபடத்தில் உள்ளவாறு தான் வீட்டுமனை அமைக்கப்பட்டுள்ளது என்பதை நான் சென்று பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை ஆனால் பக்கவாட்டுகளை அளந்துதான் வரி விதிக்கப்பட்டிருக்கும். யார் பக்கவாட்டுகளை அளந்து பார்த்தார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. கள ஆய்வு மேற்கொண்ட விவரங்கள் பற்றி எனது அலுவலகத்தில் இருக்குமா என்றால் இருக்கும். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2) வாதிகள் தவறான அளவுகளுக்கு கட்டிட அனுமதி கோரியுள்ள நிலையில் நாங்கள் சரியாக கவனிக்காமல் அனுமதி வழங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. பக்கவாட்டு அளவுகளை அளந்து பார்க்கமலேயே சொத்து வரி விதிக்கப்பட்டது என்றாலும், அலுவலகத்தில் வைத்துதான் அளந்துபார்க்காமலே அவ்வாறு வரிவிதிப்பு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. மேற்படி விண்ணப்பத்தை யார் அளித்தார் என்றால் தமிழ்ச்செல்வி என்பவரால் அளிக்கப்பட்டது. தாவா சொத்தைப் பொறுத்து பிழை திருத்தல் பத்திரம் ஒன்று 2010 -ல் ஏற்படுத்தப்பட்டது. அதனை விண்ணப்பத்தோடு அளித்தனரா என்றால் இல்லை. தாவா சொத்தைப்பொறுத்த வருவாய் ஆவணங்கள் ஏதேனும் தமிழ்ச்செல்வி விண்ணப்பத்தோடு தாக்கல் செய்தாரா என்றால் இல்லை. தமிழ்ச்செல்வி தவறான அளவுகளைக்கோரி விண்ணப்பம் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அதன்

Initial
III ADM, Cbe.

அடிப்படையில் வழங்கப்பட்ட கட்டிட அனுமதி செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

கட்டிட அனுமதி மற்றும் அங்கீகாரம் பெறுவதற்கு வருவாய் ஆவணமான பட்டா வழங்கப்படவில்லை. தற்போது அது கட்டாயம் தாக்கல் செய்யப்படவேண்டும், 2009 மற்றும் 2011 காலகட்டத்தில் அவ்வாறு இல்லை ஆனால் பொதுவாக பட்டா தாக்கல் செய்யப்படும்.

**<u>மறு குறுக்கு விசாரணை</u>**

அனுமதி ஆவணத்தில் 219 சர்வே எண்ணில் எந்த உட்பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் 219 என பொதுவாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

ஒம்/- திருமதி.M.அனுசுருதி பி.ஏ., பி.எல்.,(Hons)
மூன்றாவது கூடுதல் மாவட்ட
உரிமையியல் நீதிபதி,
கோயம்புத்தூர்.

Initial
III ADM, Cbe.